அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 15/2007 (II)

எனது இலக்கம்: EST/7/LOANS/04/1040

அரசாங்க நிர்வாக மற்றும்

உள்நாட்டலுவல்கள் அமைச்சு

சுதந்திர சதுக்கம்

கொழும்பு 07.

2014.12.26

அமைச்சு செயலாளர்கள்

மாகாண பிரதம செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

**<u>அரசாங்க அலுவலர்களுக்கு வங்கி மூலம் ஆதன மற்றும் வாகனக் கடன் வழங்கல்.</u>**

மேற்படி விடயம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட 2007.06.12 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 15/2007 மற்றும் 2009.11.18 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 15/2007 (I) ஐ தங்களது அவதானத்துக்கு உட்படுத்துகின்றேன். அச் சுற்றறிக்கையில் வங்கியின் மூலம் வழங்கப்படும் ஆதன மற்றும் வாகன கடன் தொடர்பாக அறவிட வேண்டிய வட்டி வீதம் 2015.01.01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

| கடன் தொகை (ரூபா.) | அலுவலர் செலுத்த வேண்டிய வட்டி வீதம் | அரசாங்கம் செலுத்த வேண்டிய வட்டி வீதம் | வங்கிக்கு செலுத்த வேண்டிய மொத்த வட்டி வீதம் |
|---|---|---|---|
| **ஆதனக் கடன்** | | | |
| 500,000 வரை | **4%** | **6%** | **10%** |
| 500,001 இருந்து 1,000,000 வரை | **7%** | **3%** | **10%** |
| 1,000,001 இருந்து 3,000,000 வரை | **9%** | **2%** | **11%** |
| **வாகனக் கடன்** | | | |
| வாகனக் கடன் தொடர்பான வட்டி அறவீடு | **9%** | **2%** | **11%** |

02. மேற்படி திருத்தத்திற்கு அமைவாக தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 7.4.1 மற்றும் 11.5.1 உட்பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கி மூலம் ழங்கப்படுகின்ற ஆதன மற்றும் வாகனக் கடன்களுக்காக அறவிடப்படும் வட்டி வீதம் சம்பந்தமான ஏற்பாடுகள் திருத்தப்படுகின்றன.

03. திருத்தப்பட்டவாறான வட்டி வீதம் 2015.01.01 ஆந் திகதி அல்லது அன்றைய திகதியின் பின்னர் வழங்கப்படும் ஆதன மற்றும் வாகனக் கடன் தொடர்பாக மாத்திரம் ஏற்புடையதாவதுடன், 2015.01.01 ஆந் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்ட ஆதன மற்றும் வாகனக் கடன் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வட்டி வீதமே மேலும் அமுலிலிருக்கும்.

4. இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம் /பீ. பி. அபேகோன்

செயலாளர்

அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு